# வருடாந்த செயற்திறன் அறிக்கையும் கணக்குகளும்

# 2019

## அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு


சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07

தொலைபேசி : 011-2696211-3
தொலைநகல் : 011-2695279
மின்னஞ்சல் : info@pubad.gov.lk
வலைத்தளம் : www.pubad.gov.lk

# அறிமுகம்

*அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கிய விடயமாக மாறுவதற்குக் காரணமாக அமைந்துள்ள காரணி யாதெனில் இலங்கை மக்களுக்கு இதற்கு முன்னர் அனுபவித்திராத விதத்தில் நிகழ்ந்த சம்பவமான 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று தாக்கிய சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்துக்கு (35000) மேற்பட்ட உயிர் இழப்புக்களை ஏற்படுத்தியதாகும். இந் பேரழிவினால் ஐந்து (05) இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்ளக இடம்பெயர்வுகளுக்கு உட்பட்டார்கள்.*

*இடம்பெற்ற உயிர்ச் சேதங்கள், பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதனால் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்பவை நலன்புரி விடயமாக அமைந்த அனர்த்த முகாமைத்துவத்திற்கான முறைசார்ந்த பொறிமுறை மற்றும் சட்டக் கட்டமைப்பின் தேவை எழுந்துள்ளது. அதற்கமைய, இவ்வாறான பேரழிவுகளை வெற்றிகரமாக சமாளிக்கத் தேவையான நிறுவன ரீதியான மற்றும் சட்டக் கட்டமைப்பினை தீர்மானிப்பதற்காக பாராளுமன்ற தேர்வுக் குழுவொன்று நிறுவப்பட்டது. அத் தேர்வுக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப 2005 இலக்கம் 13 இனையுடைய இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.*

*அதற்கிணங்க, 2005 இலக்கம் 13 இனையுடைய அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையொன்றும், அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றும் நிறுவப்பட்டது. அந் நிறுவனத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக 2006 பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அனர்த்த முகாமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் நிறுவப்பட்டதோடு, 2010 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக பெயர் சூட்டப்பட்டு தேசிய அனர்த்த நிவாரண சேவை மையம் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மீண்டும் அது 2018.05.01 ஆந் திகதிய இலக்கம் 2069/17 இனையுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நீர்ப்பாசனம், நீரியல் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக பெயரியப்பட்டது. அதன் பின்னர் 2018.12.28 ஆந் திகதிய இலக்கம் 2103/33 இனையுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக மீளவும் பெயரியப்பட்டது.*

*அனர்த்த முகாமைத்துவத்தின் போது அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஊடாக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கொள்கைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக அனர்த்தமொன்று நடைபெறுவதற்கு முன்னர் அனர்த்தத்தின் போது மற்றும் அனர்த்தம் இடம்பெற்றதன் பின்னரும் பாரிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதனால் அனர்த்தங்களினால் மக்களின் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அதிலிருந்து மீளக் கூடிய சமூகத்திற்கு சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், அனர்த்தத்திற்கு பிந்தைய அனர்த்த தணிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிகழ்வும் நடைபெறுகின்றது.*

*அமைச்சின் நேரடி மேற்பார்வைகள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தினால் பின்வரும் செயற்பாடுகள் கடந்த காலங்கள் பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.*

- ✓ **பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியப்படும் நிவாரணங்களை வழங்குதல்.**
- ✓ **அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல் ( அனர்த்த மீள் வீட்டுக் கட்டுமானப் பணிகள் போன்றன.)**

- ✓ இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களையும் பொருளாதாரத்தையும் மீட்டெடுப்பதற்கான மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- ✓ வறட்சியினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக நீர் வழங்கல் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டங்களை செயற்படுத்துதல்.

- ✓ அனர்த்த நிலைமைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தகவல்களை பரப்புதல்.

- ✓ அனர்த்த சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் முறை மற்றும் நிவாரண வழிமுறைகள் தொடர்பான அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்துதல்.

- ✓ திடீர் அனர்த்த நிலைமைகளின் போது நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

- ✓ பணித் -திட்டமிடல் சேவைகளை வழங்குதல்.

## தொலைநோக்கு

"பாதுகாப்பான இலங்கை "

## பணிநோக்கு

இலங்கையினுள் இயற்கையாக மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் பாதகமான தாக்கங்களை திறம்படத் தடுத்தல் மற்றும் குறைப்பதன் மூலம் வளமானதும் கண்ணியமானதுமான மக்கள் வாழ்க்கைக்கான வசதிகளை வழங்குதல்.

## இலக்குகள்

- ➢ தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- ➢ முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் பிரச்சார பொறிமுறையை செயற்படுத்தல்.
- ➢ சகல நிலைமைகளுக்கும் ஏற்றாற் போல அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.
- ➢ அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- ➢ அபிவிருத்தித் திட்டமிடல் செயற்பாட்டிற்கான தாக்க மதிப்பீட்டை செயற்படுத்தல்.
- ➢ அனர்த்த அபாயக் குறைப்புத் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் அப் பிரதேசங்களில் அனர்த்தங்களுக்கு உட்படுவதில் இருந்து குறைத்தல்.
- ➢ நிலச்சரிவு ஆபத்து மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குதல்.

- ➢ அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- ➢ அனர்த்த ஆரம்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்
- ➢ அனர்த்தத்திற்கு பிந்தைய மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு

# பணிகள்

**இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2015 செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சுக்கு பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.**

- அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்பு மற்றும் அதற்குரித்தான திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபை நிறுவனங்களின் விடயத்துக்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- இயற்கைப் பேரழிவுகள் மற்றும் மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அபாயங்களைக் குறைத்தல், முகங்கொடுத்தல், மீட்சியடைதல் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வகித்தல்.
- தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய பேரிடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
- பேரழிவுகளைக் குறைத்தல், பதிலளித்தல் மற்றும் மீட்பு தொடர்பான வெ ளிநாட்டு உதவித் திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை சரியான நேரத்தில் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சு, அரச நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- சுற்றுச்சூழல் அபாயங்களைத் தாங்கக் கூடிய வகையில் உயர் தொழில்நுட்பத் தரத்துடன் கூடிய வகையில் வீடமைப்புக்களை மேம்படுத்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மானப் பணித் துறைகளுக்குப் பொருத்தமான தொழில்நுட்பத்துக்குரிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல்.
- வளிமண்டலவியல் அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- இயற்கை பேரழிவுகளை வடிகட்டுதல் மற்றும் அவை தொடர்பாக உரிய துறைகளுக்கு விழிப்புணர்வூட்டல்.
- இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் குறித்து விழிப்பூட்டல் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகளில் இருந்து மீட்பு நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- சர்வதேச மனிதாபிமான நிவாரணத் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- அனர்த்த முகாமைத்துவ விடயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்கும் உரித்தான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

## 1.1 இடமாற்றங்கள் / ஓய்வு பெறச் செய்தல்.

***2019 ஆம் வருடம் சனவரி மாதம் முதல் அவ் வருடத்தின் திசெம்பர் மாதம் வரை அமைச்சின் ஊழியர்கள் ஏழு (07) பேர் வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். அத்தோடு அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை மூன்று (03) பேர்***

**மாத்திரமாகும். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் புதிய நியமனதாரி ஒருவர் (01) மற்றும் பயிலுநர் பட்டதாரி உத்தியோகத்தர்கள் மூன்று (03) பேர் அமைச்சில் சேவைக்காக இணைந்துள்ளார்கள்.**

## 1.2. அனர்த்த முகாமைத்துவ மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனச் சட்டங்களை தயாரித்தல்.

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2005 ஆம் இலக்கம் 13 இனையுடைய இலங்கை அனர்த்த முகாமைத்துவ திருத்தச் சட்ட வரைவினை சட்ட வரைஞருக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனச் சட்டம் சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சட்ட வரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## 1.3. மக்கள் முறைப்பாடுகள்

*அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் சேவைகளை எதிர்பார்த்து நிற்கும் மக்களினால் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருவதோடு, அம்முறைப்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை அமைச்சின் மூலம் நிறைவேற்றப்படுவதோடு, 2019 ஆம் ஆண்டினுள் பொது மக்களிடமிருந்து 380 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அம் முறைப்பாடுகள் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளன.*

## 1.4. அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான நடவடிக்கை

*2019 ஆம் ஆண்டிற்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 20 அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் 18 இற்கான அமைச்சரவை தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அடுத்த இரண்டு (02) அமைச்சரவை விஞ்ஞானங்களும் அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.*

## 1.5. பயிற்சித் திட்டங்கள்

### 1.5.1 உள்நாட்டு

*2019 ஆம் ஆண்டுக்கு தனிநபர் திறன் விருத்திக்காக ரூபா. 800,000,00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு அதில், 2019.12.31 ஆந் திகதியாகும் போது ரூபா. 598,454 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.*

*அமைச்சின் அலுவலர்களது திறன் விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் அரசின் இணை நிறுவனங்களான மிலோதா நிறுவனம், திறன் விருத்தி நிறுவனம், தேசிய தொழிலாளிகள் ஆய்வு நிறுவனம் போன்ற நிறுவனங்களின் நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிற்சித் திட்டங்களுக்காக இருபது (20) உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.*

*மேலும், 2019 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் அதன் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் அலுவலர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து அலுவலர்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்காகவும் அலுவலர்களின் மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியொன்றினை வழங்கும் பட்டறை 2019.10.26-27 ஆகிய மூன்று தினங்களிலும் தேசிய நன்னீர் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் ( கலாவெவ) இல் நடைபெற்றது.*

*முன்னைய ஆண்டினைப் போன்றே இரண்டாம் அரசகரும மொழி தமிழ் IV ஆம் மட்டத்திற்காக அரசகரும மொழித் திணைக்களத்திலிருந்து அழைக்கப்பட்ட விரிவுரையாளர் மூலம் 50 மணித்தியாளங்களைக் கொண்ட பாடநெறி நடாத்தப்பட்டு, சான்றிதழ் பத்திரங்களும் அமைச்சினால் வழங்குவதற்கு உரித்தான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு 2020 சனவரி மாதம் முதல் இவ் விரிவுரைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

### *1.5.2 வெளிநாட்டு பயிற்சி*

*2019.01.01 ஆந் திகதி முதல் 2019.12.31 ஆந் திகதி வரை அமைச்சிலிருந்து 11 அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சிக்குரிய வாய்ப்பினை பெற்று வெளிநாடு சென்றுள்ளார்கள்.*

### *1.6. உற்பத்தித்திறன் / முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்*

*2019.08.30 ஆந் திகதி உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு அமைச்சின் அலுவலர்களை ஒன்றுதிரட்டி பட்டறையொன்று நடாத்தப்பட்டுள்ளதோடு இதுவரை பிரிவுகளினால் உற்பத்தித்திறன் குழுக்களை உருவாக்கி அதற்கான தலைவர்களும் நியமிக்கப்பட்டு அவர்களுக்காக 2019.12.23 ஆந் திகதி குழுத் தலைவர் கூட்டமொன்றினை நடாத்தி செயற்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், தற்போது அகற்றப்பட வேண்டிய மற்றும் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட வேண்டிய பழைய கடிதக் கோப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.*

### *1.7* ஆலோசனைச் செயற்குழுவின் செயற்பாடு தொடர்பான முன்னேற்றம்

***அமைச்சின் ஆலோசனை செயற்குழு இரண்டு தடவைகள் அதாவது 2019.03.19 மற்றும் 2019.05.23 ஆந் திகதிகளில் நடைபெற்றது.***

### **1.8** பாராளுமன்ற வினாக்கள் தொடர்பான முன்னேற்றம்

***2019.01.01 ஆந் திகதி முதல் 2019.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 23பாராளுமன்ற வினாக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு அவையனைத்துக்கும் பதிலளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.***

## ***02. திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்***

### ***திட்டமிடல் பிரிவு***

***2.1. அரச கணக்குச் சுற்றறிக்கை 402 இன் 241 ஆம் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அது 2019.06.28 ஆந் திகதி நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான பிரிவுசார் மேற்பார்வை செயற்குழுவிடம் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.***

***2.2. 2019 ஆம் ஆண்டுக்கு உரித்தாக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 03 இனை கௌரவச் செயலாளரின் தலைமையின் கீழ் நடைபெற்றுள்ளன. காலாண்டு ரீதியான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்கள் 02 நடாத்தப்பட்டுள்ளது. இதன் போது இணை நிறுவனங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தித்***

*திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றது.*

*2.3. 2020 ஆம் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் வகையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புதிய 14செயற்திட்டங்களும், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 07 செயற்திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக சென்தாய் வட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எண்ணக்கருப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

*2.4 அமைச்சின் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றங்களைத் தயாரித்து காலாண்டு ரீதியாக சனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தல்.*

*2.5. இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் மற்றும் ஆண்டின் அரைப் பகுதியில் தயாரிக்கப்படும் மத்திய வங்கி அறிக்கைக்காக அவசியப்படும் தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு தயாரித்து அனுப்புதல்.*

*2.6. அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களினதும் தகவல்களைத் திரட்டி குறித்த மாதிரிப் படிவத்தினுள் மற்றும் அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கமைய அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.*

*2.7. செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களினது செயற்பாட்டு கருத்திட்டங்கள் / திட்டங்கள்/ செயற்பாடுகள்/ பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளின் காலாண்டு முன்னேற்றங்களை உள்ளடக்கி தயாரித்தல் மற்றும் அரசின் கணக்காய்வுத் தலைமை அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல்.*

*2.8. செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய காலாண்டு முன்னேற்ற அறிக்கையை தயாரித்து முன்வைத்தல்.*

*2.9. ரூபா. 1000 மில்லியனுக்கு மேற்பட்ட பாரிய அளவிலான மெகா செயற்திட்டங்களின் மாதாந்த செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.*

2.10. அவசர நிலைமைக்கு முன்னாயத்தம் பெறுவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு / ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 மே மாதம் 16 ஆந் திகதியன்று எம்மால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய 2019 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேசிய அவசர நிலைமைக்கு செயற்படும் திட்டத்தை முழுமைப்படுத்துதல், தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்துக்கு பிரதேச மட்டத்தில் எதிர்பாராத சந்தர்ப்பங்களுக்கான திட்டத்தையும் வளிமண்டலவியல் திணைக்களத்திற்காக வறட்சியினால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் கண்காணிப்பு அமைப்பொன்றினை விருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப *உதவி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ரூபா. 13.27 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளது.*

## 2.2. சென்தாய் வரைச்சட்டம் - 2015 – 2030

*அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக 2005-2015 ஆகிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹியுகோ செயற் திட்டத்தின் (HFA) குறைபாடுகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைக் கவனத்திற் கொண்டு 2015-2030 ஆகிய காலப்பகுதிக்காக அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்காக அமைந்த சென்தாய் வரைச்சட்டம் (Sendai Framework for Disaster Risk Reduction-SFDRR) ) என்றவாறு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது நான்கு முன்னுரிமைகளையும், உலகளாவிய இலக்குகள் ஏழுனை மற்றும் அதன் இலக்குகளை அளவிடுவதற்கான தேர்வளவுகள் 32 இனையும் உள்ளடக்கிய சர்வதேச உடன்பாடாகும். அதற்கமைய, 2020 ஆம் ஆண்டு முதல் அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.*

*இச் செயற்பாட்டு வரைச்சட்டத்தைச் செயற்படுத்தும் இலங்கையின் மையப் புள்ளியாக ( Focal Point ) விளங்கும் அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புடன் கூடிய அமைச்சாக பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய, அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் அங்கத்துவ நிறுவனங்களுடன் இணைந்து அவசியப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அந் நிறுவனத்தின் செயற்பாட்டுத் தொகுதியும் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. சென்தாய் இலக்குகள் ஏழின் (07) A மற்றும் B இலக்குகள் இரண்டும் (அனர்த்தம் காரணமாக இறந்த தனிநபர்களின் எண்ணிக்கை மற்றும் அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் எண்ணிக்கை) இற்காக 2000 வருடம் முதல் 2019 வரை தகவல்கள் வழங்கி முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.*

# தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம்

## 1. அறிமுகம்

சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சின் கீழ் 1996 ஆம் ஆண்டில் தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் (NDRSC) தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமாக நிறுவப்பட்டது. இலக்கம் 1422/22 மற்றும் 2005.12.08 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அது அனர்த்த, புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு பணிகளை திட்டமிடுவதற்காகவும் செயற்படுத்துவதற்காகவும் அனர்த்த மற்றும் நிவாரண சேவை நிலையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலக்கம் 1482/9 மற்றும் 2007.01.09 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அது தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு மீள்குடியேற்றம் செய்தல் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலக்கம் 1651/220 மற்றும் 2010.04.30 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் அமைந்து செயற்படுகின்றது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் கொழும்பு 07 வித்தியா மாவத்தையில் அமைந்துள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ விடயப் பொறுப்பு அமைச்சினால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு ஏற்ப குறித்த மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக அதன் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நிவாரண நடவடிக்கைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## 1.4. தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முன்னுரிமைகள்

1. அனர்த்த நிவாரண சேவைகள், புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
2. அனர்த்த நிவாரண தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.
3. பொது மக்களை விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற் கொள்ளல்.
4. நல்லாட்சியை சான்றுப்படுத்தல்.
5.

## 1.5 தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் பணியாட்தொகுதியினர்

| தொடரிலக்கம் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | தற்போதுள்ள பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| | சிரேஷ்ட மட்டம் | | | |
| 1 | பணிப்பாளர் | 1 | 1 | 0 |
| 2 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( இ. நி. சே. ) | 6 | 3 | 3 |
| 3 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( இ. அ. சே. ) | 1 | 0 | 1 |
| 4 | கணக்காளர் (இ. க. சே.) | 1 | 1 | 0 |
| | மொத்தம் | 9 | 5 | 4 |
| | மூன்றாம் நிலை மட்டம் | | | |
| 1 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப | 2 | 1 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர் ( II ஆந் தரம் ) | | | |
| | மொத்தம் | 3 | 2 | 1 |
| | இரண்டாம் நிலை மட்டம் | | | |
| 1 | அபிவிருத்தி உதவியாளர்/ உத்தியோகத்தர் (அனர்த்த முகாமைத்துவ/ அனர்த்த நிவாரண சேவைகள்) | 364 | 347 | 17 |
| 2 | முகாமைத்துவ உதவியாளர் | 8 | 6 | 2 |
| 3 | கருத்திட்ட உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| 4 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( III ஆந் தரம் ) ( தரவுப் பதிவு இயக்கி ) | 1 | 1 | 0 |
| | மொத்தம் | 376 | 353 | 20 |
| | ஆரம்ப நிலை மட்டம் | | | |
| 1 | சாரதிகள் | 7 | 5 | 2 |
| 2 | அலுவலக பணியாளர் | 4 | 2 | 2 |
| 3 | லொரிச் சாரதி உதவியாளர் | 5 | 4 | 1 |
| | மொத்தம் | 16 | 11 | 5 |
| | மொத்தம் | 402 | 372 | 30 |

### 2. நிவாரணச் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கல்.

இயற்கை மற்றும் மனித நடவடிக்கையால் ஏற்படும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு அரசின் பிரதான நிவாரணக் குழு இரண்டின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன.

1. திறைசேரியின் ஊடாக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் ( 01 ஆம் அட்டவணை)
2. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (NITF) ஊடாக தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்ட முறையின் (NNIDS) கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள்

**அட்டவணை 01 திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் - 2019**

| இலக்கம் | விபரம் | ஒதுக்கீடு (ரூபா ) | செலவுகள் (.ரூபா) |
|---|---|---|---|
| 01 | மீண்டுவரும் செலவினங்கள் | 998,343,000.00 | 708,796,603.72 |
| 02 | மூலதனச் செலவுகள் | 3,979,252,000.00 | 2,231,582,191.06 |
| மொத்தம் | | 4,977,595,000.00 | 4,977,595,000.00 |

ஆதாரம்: NDRSC

### 3. தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் நடைமுறைப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அடையாளப்படுத்த முன்னுரிமைகளின் கீழ் அவர்களின் முன்னேற்றம் - 2019

#### 3.1. அனர்த்த நிவாரணம், பதிலளிப்பு, புனர்வாழ்வு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள்.

3.1.1 வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க அனர்த்த நிவாரண சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிய நிவாரணங்களை வழங்குதல்.

3.1.2 அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல்.

3.1.3 நிலச்சரிவினால் சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த மக்களுக்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலச்சரிவுடன் கூடிய அபாய நிலை காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களையும் மீள் குடியேற்றம் செய்தல் ( அனர்த்த

*அபாயங்களை அறிந்து கொள்ளல் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடத்தினுள் அக் குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்.)*

*3.1.4 கடும் வரட்சியுள்ள வானிலை நிலைமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*

*3.1.5 பாதுகாப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.*

*3.1.6 வழங்கப்பட்டுள்ள சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளின் செயலில் உள்ள நிவாரண உத்தியோகத்தர்களை ஆயுதபாணியாக்குவதற்காக இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*

### *3.1.1. வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க அனர்த்த நிவாரண சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிய நிவாரணங்களை வழங்குதல்.*

*தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் அனர்த்தமொன்று இடம்பெற்ற உடனே பதலளிப்புக்களை வழங்கும். அனர்த்தம் இடம்பெற்றதிலிருந்தே பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுவதோடு அனர்த்த நிலைமை தொடர்ந்தும் அதிகரிக்குமாயின் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அனர்த்த நிலைமைகள் முடியும் வரை மற்றும் பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருக்கும் காலப்பகுதியினுள் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேறும் வரை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு நிலையங்களிலே தங்க வைக்கப்படுவார்கள்.*

- ***தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டத்தின் (NNDIS) கீழ் அவசர நிவாரணம் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல்.***

*2016 ஏப்ரல் மாதம் 1 ஆந் திகதி முதல் (NNDIS) நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் அரசு ரூபா. மி. 1,500 இனையுடைய வருடாந்த நிதித் தொகையை வழங்கியது. வருடாந்த காப்புறுதியான 15 பில்லியன் ரூபா தொகையாக இருந்ததோடு அவற்றில் ரூபா. 2.5 பில்லியனை அவசர நிவாரணங்களுக்கு வழங்கியுள்ளதோடு இயற்கைப் பேரழிவுகளின் மூலம் ஏற்படும் வீடுகளுக்கான சேதங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களின் சேதங்களுக்காக 12.5 பில்லியன் ரூபா தொகையினை ஒதுக்கியுள்ளது. சுனாமி, நிலநடுக்கம் , வெள்ளம் , நிலச்சரிவு, மின்னல் மற்றும் சூறாவளி போன்ற இயற்கை அழிவுகளினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு NNDIS இனால் காப்புறுதி வழங்கப்படுகின்றது. ஆனால் வரட்சி, தீ மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகளுக்கு காப்புறுதி வழங்கப்படுவதில்லை.*

***அட்டவணை 02 NNDIS இனால் வழங்கப்படும் அவசர நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகள்***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *சமைத்த உணவு ) (நாளொன்றுக்கு* | *ரூபா300.00 .* | | | | |
| *உலர் உணவுப் பொருட்கள் ) ஒரு (குடும்பத்துக்கு* | *ரூபா . 900 ஒரு ) நபருக் (கு* | *ரூபா 1200 . இரு அங்கத்தவர்களுக்கு* | *ரூபா 1400 . மூன்று அங்கத்தவர்களுக்கு* | *ரூபா 1600 . நான்கு அங்கத்தவர்களுக்கு* | *ரூபா1800 . ஐந்து அங்கத்தவர்கள் மேற்பட்டவர்களுக்கு* |
| *இறப்பு / காயமடைதல்* | *ரூபா(அதிகபட்சம்) 250,000.00 .* | | | | |
| *வீடுகளின் சேதம்* | *ரூபா(அதிகபட்சம்) 2,500,000.00 .* | | | | |
| *வீட்டு உபகரணங்கள்* | *ரூபா(அதிகபட்சம்) 25,000.00 .* | | | | |
| *சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களின்* | *ரூபா(அதிகபட்சம்) 2,500,000.00 .* | | | | |

| | |
|---|---|
| சேதம் | |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களில் உள்ளடங்குப வைகள் | ரூபா(அதிகபட்சம்) 100,000.00 . |

ஆதாரம்: NDRSC

- **அவசர சந்தர்ப்பங்களில் நிவாரண சேவைகளை வழங்குதல்.**

*2019 இன் சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குடும்ப ரீதியாக 510476 இன் 821152 நபர்கள் காணப்பட்டதோடு அவற்றில் 28003 குடும்பங்களின் 105914 பேர் 475 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அறிக்கையிடப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 96 ஆகும். முழுமையான சேதங்களுக்கு உட்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 562 ஆகும் என்பதோடு பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 29799 ஆகும். சேதமடைந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 1140 ஆகும்.*

*அனர்த்த நிலைமைகள் இயல்பான நிலைமைக்கு திரும்பும் வரை பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு, குடிநீர், உலர் உணவுகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்காக NNDIS இனால் ஒதுக்கப்பட்டுள்ள அவசர நிவாரண நிதி பயன்படுத்தப்படுகின்றது. NNDIS இன் மூலம் உள்ளடக்கப்படாத அனர்த்தங்களுக்காக, மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான நிதி வழங்கப்படுவது திறைசேரியின் நிதி ஏற்பாடுகளின் மூலமாகும் ( அட்டவணை 03 இனுள் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.*

**அட்டவணை 03 அவசர நிவாரணங்கள் மற்றும் பதிலளிப்புச் சேவைகள் - செலவுகள் (2019)**

| விபரம் | ) NNDISரூபா(. | திறைசேரியின் நிதி (.ரூபா) |
|---|---|---|
| உடனடி நிவாரணம் | 120,006,862.62 | 1,185,300.00 |
| மரண இழப்பீடு | 6,950,000.00 | தே படுவதில்லை / |
| உடனடி பதிலளிப்பு | தே படுவதில்லை / | 30,088433.00 |
| மொத்தம் | 126,956,862.62 | 31,273,733.00 |

**ஆதாரம்: NDRSC**

### 3.1.2. NNDIS இனால் வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடுகளை செலுத்துதல்.

*வீடு மற்றும் வீட்டு உபகரணங்களின் சேதங்களுக்காக அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூபா. 2.5 மில்லியன் ஆகும் ( தொழில்நுட்பக் குழுவின் சேத மதிப்பீட்டின் அடிப்படையில் ) வீடு மற்றும் வீட்டு உபகரணங்களின் சேதங்களுக்காக வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூபா. 25,000.00 ஆகும் என்பதோடு வருடாந்த புறள்வு ரூபா. 10 மில்லியனுக்கான அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை 2.5 மில்லியன் ரூபாவாகும். ( தொழில்நுட்ப குழுவின் சேத மதிப்பீட்டின் அடிப்படையில்). கையிருப்புகள் தொலைந்து போதல் மற்றும் இயந்திராதிகளுக்கு ஏற்படும் சேதங்களுக்காக அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை 100,000.00 ரூபாவாகும். ரூபா. 10,000.00 இனை விட சேதங்களுக்குள்ளான வீடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக ரூபா. 10,000.00 முற்பணமாக செலுத்தப்படுகின்றது. சேதம்*

*ரூபா. 10,000.00 இற்குக் குறைவாயின், உரித்துடமையுள்ள குறித்த தொகை உரிமையாளருக்கு செலுத்தப்படும்.*

### *அட்டவணை 04 NNDIS இனால் வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.*

<table>
<tr><th colspan="2" rowspan="2">விபரம்</th><th colspan="2">2018</th><th colspan="2">ஆந் திகதி வரை 2019.11.25</th></tr>
<tr><th>உரிமை கோரல்களின் எண்ணிக்கை</th><th>நிதி ஒதுக்கீடு ) (ரூபா</th><th>உரிமை கோரல்களின் எண்ணிக்கை</th><th>நிதி ஒதுக்கீடு (ரூபா)</th></tr>
<tr><td colspan="2">முற்பணம் செலுத்துதல் 10,000.00 .ரூபா) வரை(</td><td>23,130</td><td>,298 651,700.00</td><td>24059</td><td>226,669,254.19</td></tr>
<tr><td rowspan="4">இனால் NNDIS வீடுகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.</td><td>வீடுகள்</td><td>5,564</td><td>215,125,212.50</td><td rowspan="4">4,602</td><td rowspan="4">179,358,389.00</td></tr>
<tr><td>வீட்டு உபகரணங்கள்</td><td>134</td><td>997,919.00</td></tr>
<tr><td>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையத்தின் - கட்டிடங்கள்</td><td>189</td><td>5,555,607.20</td></tr>
<tr><td>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிலையங்களில் உள்ளடங்குபவைகள்</td><td>334</td><td>9,127,470.00</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>29.351</td><td>529,457,899.70</td><td>28.661</td><td>406,027,644.14</td></tr>
</table>

***ஆதாரம்: NDRSC***

### *3.1.3 நிலச்சரிவினால் சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த மக்களுக்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலச்சரிவுடன் கூடிய அபாய நிலை காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களையும் மீள் குடியேற்றம் செய்தல் ( அனர்த்த அபாயங்களை அறிந்து கொள்ளல் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வருடத்தினுள் அக் குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்.)*

*கேகாலை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் மற்றும் மேலும் சில மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலச்சரிவுகளுக்கு பதிலளிப்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நிலச்சரிவு அபாயங்கள் கொண்ட பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை அடையாளம் காணல். பின்னர் குறித்த குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள் குடியேற்றம் செய்வதற்காக மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 14 மாவட்டங்களில் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.*

*பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நிலச்சரிவு அபாயம் கூடிய பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, பதுள்ளை, நுவரெலியா, கேகாலை, கண்டி, மாத்தளை, களுத்துரை, மாத்தறை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹ, குருணாகல் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களினுள் காணப்படும் 121 பிரதேச செயலகங்களில் வதியும் 15,025 குடும்பங்கள் தற்போது தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிலையத்தினால் பயனாளிகாக இனங்காணப்பட்டுள்ளார்கள். குறித்த மாவட்ட மற்றும் பிரதேச*

*செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இந் நிகழ்ச்சித்திட்டம் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.*

*இச் சந்தர்ப்பத்தினுள், என்பீஆர்ஓ இனால் அடையாளங் காணப்பட்ட குறித்த பயனாளிக் குடும்பங்கள் 11,517 இன் பாதுகாப்பு இடங்களில் மீள் குடியேற்றம் செய்வதற்காக NDRSC இனால் அதன் தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புடன் மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியை வழங்கி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

**அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகைமை கொண்ட பயனாளிகளுக்கு மூன்று விருப்பங்களைப் பெற முடியும்.**

***01 ஆம் விருப்பம்:*** *ரூபா. வீட்டுடன் கூடிய பொருத்தமான காணியை கொள்வனவு செய்வதற்காக 1.6 மில்லியன் வழங்கப்படுகின்றது.*

***02 ஆம் விருப்பம்:*** *அரசிடம் காணி காணப்படாதுவிடின், வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ள 1.2 மில்லியனுக்கு மேலதிகமாக பொருத்தமான காணியை கொள்வனவு செய்வதற்காக 0.4 மில்லியன் வழங்கப்படுகின்றது.*

***03 ஆம் விருப்பம்:*** *அரசினால் காணித் துண்டொன்று ( கிட்டத்தட்ட 10 பேர்ச்சஸ் அளவு) வழங்கப்படுமாயின் , பயனாளிகளுக்கு வீடு கட்டிக் கொள்வதற்காக ரூபா. 1.2 மில்லியனை நிறைவு செய்யும் கட்டம் அடிப்படையில் நான்கு (04) தவணை முறை வழங்கப்படும்.*

*மேலும் , மீள்குடியேற்றம் செய்வவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான காணிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் (NBRO இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள்) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.*

*கேகாலை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கையின் கீழ் 1689 குடும்பங்களில் 1647 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். மொத்தச் செலவு ரூபா. 1,949.41 மில்லியனாகும். 2017 தொடக்கம் இது வரை மீள்குடியேற்றம் செய்யப்படும் வேலைத் திட்டத்தின் மொத்த செலவுகள் ரூபா. 3,040.22 பில்லியன், அது குறித்த தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 05.*

***அட்டவணை 05 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்***

| இலக்கம் | மாவட்டம் | மீள்குடியேற்றம் செய்வதற்காக தகைமை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை | காணியுடன் கூடிய ( அரசினால் வழங்கப்பட்ட / அவர்களுக்கு உரித்துடைய) குடும்பங்களின் எண்ணிக்கை | நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை | முழுமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | ஹம்பாந்தோட்டை | 106 | 87 | 28 | 59 |
| 2 | காலி | 353 | 265 | 119 | 144 |
| 3 | மாத்தறை. | 419 | 294 | 84 | 206 |
| 4 | இரத்தினபுரி | 2,277 | 984 | 435 | 223 |
| 5 | கேகாலை | 183 | 131 | 20 | 57 |
| 6 | களுத்துரை | 1,694 | 690 | 242 | 446 |
| 7 | கண்டி | 1,278 | 290 | 272 | 9 |
| 8 | பதுள்ளை | 3,608 | 538 | 43 | 3 |
| 9 | மாத்தளை | 472 | 153 | 82 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | நுவரெலியா | 1,088 | 818 | 109 | 0 |
| 11 | குருணாகல் | 8 | 3 | 0 | 3 |
| 12 | கம்பஹா | 9 | 3 | 0 | 3 |
| 13 | மொனராகலை | 7 | 4 | 4 | 0 |
| 14 | கொழும்பு. | 16 | 2 | 0 | 2 |
| **மொத்தம்** | | **11.518** | **4.262** | **1.438** | **1.156** |

**ஆதாரம்: NDRSC**




**வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக மற்றும் நிலச்சரிவு கூடியளவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல் ( இடத்தின் வரைபடம் - நிவிதிகல மீள்குடியேற்றக் காணி)**

**ஆதாரம்:NDRSC**



## 3.1.4. கடும் வரட்சியுடன் கூடிய வானிலை காரணமாக ஏற்படும் விபரீதமான தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்காக குடிநீர் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.

ஆதிகாலம் தொட்டு நாட்டின் ஒரு சில வலயங்களில் நிலவுகின்ற கடுமையான வரட்சிக் காலநிலை காரணமாக கணிசமானவர்களுக்கு அவர்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள். 2017 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 2017 1,1,13858 ஆகும். 2018 ஆம் ஆண்டில் அது 567,987 ஆகவும் 2019 ஆம் ஆண்டில் 312,383 ஆகவும் காணப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீரை விநியோகிப்பதனை இலகுபடுத்துவதற்காக குறித்த மாவட்டங்களுக்கு 133 லொரி பவுஸர்கள் , 364 டரக்டர் பவுஸர்கள் மற்றும் 11936 நீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகத்திற்காக மாவட்ட செயலகங்களுக்கு ரூபா. 124.33 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டன.

## 3.1.5. பாதுகாப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

2018 ஆம் ஆண்டில், பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றல் மற்றும் அனர்த்தம் இடம்பெறும் காலங்களில் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாப்பானதும் சொகுசானதுமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, 325 பாதுகாப்பு நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் கொண்டதாக விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தலின் பால் கவனம்

செலுத்தப்பட்டுள்ளது. முன்முயற்சியாக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 325.25 மில்லியன் தொகையாக உள்ளதோடு, அதில் ரூபா. 102 மில்லியனும் 2018 ஆம் ஆண்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 20 மாவட்டங்களில் உள்ள 106 பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள 164பாதுகாப்பு நிலையங்களை மேம்படுத்துவதற்காக 92.47 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் மேம்பாட்டு நடவடிக்கைக்காக திட்டமிடப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்கள் 99 ஆக உள்ளதோடு முன்முயற்சிக்காக ரூபா. 100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபா. 78.23 மில்லியன் செலவிடப்பட்டு 99 நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

### 3.1.6. வழங்கப்பட்டுள்ள சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளின் செயலில் உள்ள நிவாரண உத்தியோகத்தர்களை ஆயுதபாணியாக்குவதற்காக இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். அனர்த்த நிவாரண சேவை தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தல்.

2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அனர்த்த நிவாரண வழிகாலட்டல் திட்டம் ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தாராளமான தொழில்நுட்ப உதவிகளுடன் அனர்த்த நிவாரணம் மற்றும் பதிலளிப்புச் சேவைகளை வினைத்திறன் கொண்டதாக வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல். “ நிவாரணம் மற்றும் பதிலளிப்புக்களை தயார்படுத்தும் திட்டம் ( பேரிழிவுத் திட்டம்) ஆக 2017 ஆம் ஆண்டில் மீள கவனத்திற் கொள்ளப்படும். நிச்சயமற்ற திட்டத்தின் தகவல்களை உள்நுழைப்பதற்காக ஆன்லைன் அமைப்பொன்றை தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசங்களில் நிவாரணத்தின் அவசியப்பாட்டினை இனங்கண்டு கொள்ளல் மற்றும் பயனுறுதி வாய்ந்த வகையில் பதிலளிப்புக்களை வழங்குவதற்காக தரப்பினருக்கு மற்றும் குறித்த தரப்பினர்களுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் தொடர்பாடல் இதன் மூலம் நடைபெறுகின்றது. குறித்த ஆன்லைன் அமைப்பு சிறப்பாக விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அனர்த்தம் தொடர்பான வழிகாட்டலுக்காக அவசியப்படும் சகல தகவல்களும் இணையத் தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் அமைப்பிற்கு வழங்கப்படுகின்றது.http://contingency-planning.ndrsc.lk பேரழிவுத் திட்டம் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படுவதோடு, நிவாரண வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்காக அதில் கவனத்திற் கொள்ளத்தக்க அளவு பங்களிப்பினை வழங்குதல். மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்தத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குறித்த உத்தியோகத்தர்கள் முறைசார்ந்த பயிற்சி மற்றும் அப்பியாசத்தை ஆரம்பிப்பதன் ஊடாக நிச்சயமற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மென்மேலும் விருத்தி செய்யப்படுகின்றது. WFP இனால் நிதி வழங்கப்பட்ட அவ்வாறான பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் 2019 ஆம் ஆண்டிலும் நடைபெற்றது.

ஆன்லைன் அமைப்பில் பதிவிடப்பட்டுள்ள தகவல்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

- அனர்த்தத்தின் போது நிவாரண நடவடிக்கைகளில் நேரடிய தொடர்புபடும் உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் தககல்
- குறித்த கிராம உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் தகவல்
- ஆபத்து நிகழ முடியுமான பிரதேசங்களை மாற்றீடு செய்தல் , கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டம் வரை.
- கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் உள்ள குடும்பங்கள் சிலவற்றுக்கு தாக்கம் ஏற்பட முடியும்.
- வரலாற்று ரீதியான தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் அமைந்த இயல்திறன் தாக்கம் செலுத்தும் சந்தர்ப்பங்கள் ( பாதிக்கப்பட்டவர்களின் தரவுகள்)
- பிரதேசத்தில் ஆபத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய குடும்பங்களை தங்க வைக்க முடியுமான பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்கள்
- பாதுகாப்பு நிலையங்களில் ஒருங்கிணைப்பு குழுக்களின் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தகவல்கள்
- எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள் பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்கள்
- பாதுகாப்பு நிலையங்களுக்கு சேவை வழங்கும் நபர்களின் தகவல்கள்

- அனர்த்தங்களின் போது அவசியப்படும் உணவுகள், உணவற்ற பொருட்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் தொடர்பான விபரங்கள்

***NDRSC உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக மக்களுக்கு இத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.*** http://www.ndrsc.lk/.




### *4. 2020 இற்கான எதிர்பார்க்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்*

***அட்டவணை 06 2020 இற்கான எதிர்பார்க்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்***

| செயற்திட்ட விபரம் | மதிப்பிடப்பட்ட செலவுகள் (.ரூபா) | எதிர்பார்க்கப்படும் செலவுகள் ரூபா) |
|---|---|---|
| கேகாலை மாவட்டத்தில் வீடுகளை நிர்மாணித்தல். | மில்லியன் 2.838 | மில்லியன் 30 |
| அதிகூடிய ஆபத்து மிக்க பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல். | மில்லியன் 21.050 | மில்லியன் 200 |
| பாதுகாப்பு நிலையங்களின் வசதிகளை மேம்படுத்தல். | மில்லியன் 325 | 30மில்லியன் |
| வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவினால் சேதமடைந்த பாதைகளை மீளப் புனரமைத்தல். | மில்லியன் 2.108 | நிதி ஒதுக்கீட்டினைப் பெற முடியாதுள்ளது. |

### *5. எதிர்காலத் திட்டங்கள்*

1. *கடுமையாக அனர்த்தங்களுக்கு உட்பட முடியுமான மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு மேலதிக நிவாரண உத்தியோகத்தர்களை இணைத்தல்.*

2. *உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மிக்க தொடர்பாடலிற்கான வசதிகளை வழங்கும் வகையில் தொடர்பாடல் கொடுப்பனவினைச் செலுத்தல் அல்லது உத்தியோகபூர்வ நடமாடும் சிம் அட்டையொன்று, அமைப்பினால் NDRSC உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் கூலியை வழங்குதல்.*

3. *சேதங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறை ஒழுங்கு தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி , NNDIS இன் கீழ் சேத மதிப்பீட்டில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காக.*

4. *அனர்த்த நிவாரண சேவை ஆன்லைன் தகவல் அமைப்பினை வலுப்படுத்தல் மற்றும் தொடர்ந்தும் விருத்தி செய்தல் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி.*

5. *ஏற்கனவே புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய மாவட்டங்களுக்காக முன்னோடிச் செயற்திட்டத்தமாக களுத்துரை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் கொன்கிரீட் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினை அறிமுகஞ் செய்தல்.*